**அ.வ.எண்.93/2024**
**வா.சா.1 : உமாமகேஷ்வரி**
**தேதி : 06.10.2025**
**<u>I.A. No.13/2025–ல் 17.09.2025 அன்று பிறந்த உத்தரவின்பேரில் சாட்சி திரும்ப வரவழைக்கப்பட்டு, சத்தியபிரமாணம் செய்யப்பட்டு,</u>**
**<u>1ம் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை : ஆரம்பிக்கும் நேரம் : 5.20</u>**

தாவா ஏ அட்டவணையில் உள்ள சொத்துக்கு என் தகப்பனாரின் உடன்பிறந்தவர்களுக்கு அதில் உரிமை இல்லை. என் தகப்பனார் 1976 ல் ஆலம்பாடி கிராமத்தில் ஒரு சொத்து வாங்கியுள்ளார். மேற்சொன்ன சொத்தினை 05.06.2003 ல் வா.சா.ஆ.3 ஆவணத்தின் மூலம் பொன்னுசாமி என்பவருக்கு விற்றுள்ளார். வா.சா.ஆ.3 ல் கண்டுள்ள சொத்தில் எனக்கும் உரிமை உள்ளது. 05.06.2003 அன்று கிரையம் கொடுக்கும்போது நான் சிறுமியாக இருந்தேன். எனக்கு அப்போது வயது 16. அதில் நான் தரப்பினராக இல்லை. வா.சா.ஆ.3 ல் உள்ள சங்கதிகள் எனக்கு தெரியும். வா.சா.ஆ.3 சட்ட ரீதியாக செல்லாது என நான் இன்று வரை எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை. வா.சா.ஆ.3 ஆவணத்தில் உங்களுக்கு எந்த ஒரு உரிமையும் இல்லாததால் தான் இன்று வரை நீங்கள் எந்தவொரு சட்ட நடவடிக்கையும் எடுக்கவில்லை என்று சொன்னால் சரியல்ல. வா.சா.ஆ.3 ஆவணத்தில் என் சகோதரரும் அந்த ஆவணத்தில் எழுதிக்கொடுத்துள்ளார். வா.சா.ஆ.3 ல் கண்டுள்ள விவரங்கள் அனைத்தும் தவறானவை. வா.சா.ஆ.2 மற்றும் 3 ஆவணங்களில் பெறப்பட்ட பணத்தை வைத்து ஏ செட்யூல் சொத்து வாங்கவில்லை என்று சொன்னால் சரியல்ல. வா.சா.ஆ.4 ஆவணத்தில் கண்டுள்ள சொத்தினை மற்ற பரம்பரை சொத்துடன் கலந்து கூட்டாக அனுபவிக்கவில்லை என்று சொன்னால் சரியல்ல. தாவா ஏ செட்யூல் சொத்தினை நீங்கள் எந்த காலத்திலும் கூட்டாக அனுபவிக்கவில்லை என்று சொன்னால் சரியல்ல. வா.சா.ஆ.7 மற்றும் 8 வாயிலாக நீங்கள், உங்கள் தகப்பதனார் கூட்டாக கரூர் கூட்டுறவு மற்றும் தொடக்க வேளாண்மை வங்கியில் அடமானம் வைத்து கடன் வாங்கியுள்ளீர்கள் என்றால் சரிதான்.

மேற்சொன்ன அடமானத்தில் உங்களுக்கு எந்த உரிமை இல்லாத போதிலும் குடும்ப உறுப்பினர் என்பதால் எந்தவொரு பிரச்சனையும் வரக்கூடாது என்பதற்காக உங்களை ஒரு தரப்பினராக அதில் சேர்த்துள்ளார்கள் என்று சொன்னால் சரியல்ல. வா.சா.ஆ.3 வாயிலாக நீங்கள், உங்கள் தகப்பதனார் கிரையம் கொடுக்கும்போது உங்கள் சகோதரரை ஒரு தரப்பினராக சேர்த்துள்ளார்கள். அதற்கு காரணம் மேற்சொன்ன கிரையத்தில் உங்கள் சகோதரருக்கு எந்த உரிமை இல்லாத போதிலும் குடும்ப உறுப்பினர் என்பதால் எந்தவொரு பிரச்சனையும் வரக்கூடாது என்பதற்காக உங்கள் சகோதரரை ஒரு தரப்பினராக அதில் சேர்த்துள்ளார்கள் என்று சொன்னால் சரியல்ல. நீங்கள் தாவாவில் சொல்லியுள்ளது போல் உங்கள் தகப்பனார் பாகம் பிரிக்க எப்போதும் ஒத்துக்கொள்ளவில்லை என்று சொன்னால் சரியல்ல. தாவா ஏ அட்டவணை சொத்தில் இறந்துபோன நதியாவிற்கு பிறப்பால் எந்தவொரு உரிமையும் இல்லை என்று சொன்னால் சரியல்ல. உங்கள் பூர்வீக சொத்திலிருந்து வருமானத்தை கொண்டு தாவா ஏ செட்யூல் சொத்து வாங்கவில்லை என்றும் அதற்கான உபரி வருமானத்தை உங்கள் பூர்வீக சொத்து வழங்கவில்லை என்று சொன்னால் சரியல்ல. உங்கள் தகப்பனார் உங்கள் சகோதரரான 3ம் பிரதிவாதிக்கு எழுதிக்கொடுத்த செட்டில்மெண்ட் பத்திரம் சட்டப்படி செல்லும் என்று சொன்னால் சரியல்ல. தாவா ஏ செட்யூலில் கண்டுள்ள வீடு 1ம் பிரதிவாதியான உங்கள் தகப்பனார் அவரது சொந்த வருமானத்தில் கட்டியது என்று சொன்னால் சரியல்ல. மேற்சொன்ன வீட்டை கட்டுவதற்கு நீங்கள் எந்தவொரு பணம் கொடுக்கவில்லை என்று சொன்னால் சரியல்ல. உங்கள் தகப்பனார் உங்கள் மீது வெள்ளியணை காவல்நிலையத்தில் நீங்கள் அவரை தாக்கி ஆவணங்களை எடுத்துச்சென்றதாக புகார் கொடுத்துள்ளார் என்று சொன்னால் சரிதான். மேற்படி புகார் கொடுத்த பிறகு தான் உங்கள் தகப்பனார் உங்கள் சகோதரருக்கு மேற்படி தாவா ஏ செட்யூல் சொத்தை செட்டில்மெண்ட் எழுதிக்கொடுத்தார்

என்றால் சரிதான். மேற்படி அசல் ஆவணங்கள் இல்லாத காரணத்தினால் செட்டில்மெண்ட் ஆவணத்தை பதிவு செய்ய சார்பதிவாளர் மறுத்த காரணத்தினால் உயர்நீதிமன்றத்தில் Writ மனு 1ம் பிரதிவாதி தாக்கல் செய்தார் என்று சொன்னால் சரிதான். மேற்படி Writ மனு மீது ஏற்பட்ட உத்தரவின் மேல் ஒரு சீராய்வு மனு தாக்கல் செய்யப்பட்டு அதில் நானும் ஒரு தரப்பினராக இருந்தேன் என்று சொன்னால் சரிதான். சீராய்வு மனுவில் நீங்கள் அசல் ஆவணங்கள் வினோத் என்பவரிடம் இருப்பதாக கூறியுள்ளீர்கள் என்று சொன்னால் சரிதான். மேற்படி சீராய்வு மனுவில் பிறப்பிக்கப்பட்ட உத்தரவின் பேரில் தான் தாவா ஏ செட்யூல் சொத்தை பொறுத்து முதல் பிரதிவாதி 3ம் பிரதிவாதிக்கு எழுதிக்கொடுத்த செட்டில்மெண்ட் பத்திரம் பதிவு செய்யப்பட்டுள்ளது என்று சொன்னால் சரிதான். சீராய்வு மனு நிலுவையில் இருக்கும்போது மேற்சொன்ன செட்டில்மெண்ட் ஆவணம் செயலற்று போக வேண்டும் என்பதற்காக இந்த வழக்கு தாக்கல் செய்துள்ளீர்கள் என்று சொன்னால் சரியல்ல. 3ம் பிரதிவாதிக்கு ஏற்பட்ட கடனை நீங்கள் எந்த காலத்திலும் தீர்க்கவில்லை என்றும் அவ்வாறு எந்த கடனும் 3ம் பிரதிவாதிக்கு ஏற்படவில்லை என்று சொன்னால் சரியல்ல. Exhibit.X1 அடமான பத்திரமானது போலியாக தயாரிக்கப்பட்ட ஆவணங்களின் அடிப்படையில் ஏற்படுத்தப்பட்ட ஆவணம் என்று சொன்னால் சரியல்ல. உங்கள் தகப்பனார் கடன் வழங்க தடையில்லா ஒப்பந்த பத்திரம் எழுதிக்கொடுக்கவில்லை என்று சொன்னால் சரியல்ல. மேற்சொன்ன ஆவணத்தில் உள்ள அடங்கல் போலியாக தயாரிக்கப்பட்டது என்று சொன்னால் சரியல்ல. ஏ அட்டவணையில் கண்ட வீட்டை தவிர இதர சொத்துக்கள் அனைத்தும் 1 மற்றும் 3ம் பிரதிவாதிகளின் தனிப்பட்ட சுவாதீனத்தில்தான் உள்ளது என்று சொன்னால் சரிதான். தாவா சொத்தை பொறுத்து உங்களுக்கு பாகம்கோர உரிமை இல்லை என்றும் வழக்கை தள்ளுபடி செய்ய வேண்டும் என்று சொன்னால் சரியல்ல. நீதிமன்றத்தின் அனுதாபம் பெற வேண்டி உங்கள்

பிராதில் உங்கள் தாயாரை 1 மற்றும் 3 பிரதிவாதிகள் கவனிப்பதில்லை என்று கூறியுள்ளீர்கள் என்று சொன்னால் சரியல்ல. (நீதிமன்றத்தில் எழுப்பட்ட எழுவினாவிற்கு இந்த கேள்வி தேவையற்றது என்று கூறிய போது பிரதிவாதி வழக்கறிஞர் அதை கட்டாயம் பதிவு செய்ய வேண்டும் என்று கூறியதால் பதிவு செய்யப்படுகிறது.) சிசிடிவி கேமரா பாதுகாப்பிற்காக வைக்கப்பட்டிருந்ததை நீங்கள் பெண் குழந்தைகளின் நலனுக்கு விரோதமாக இருக்கிறது என்று நீங்கள் காவல்நிலையத்தில் பொய்ப்புகார் அளித்துள்ளீர்கள் என்று சொன்னால் சரியல்ல.

**முடிவடையும் நேரம் – 5.50**

**ஓம்/.K.H.இளவழகன்.,**
முதன்மை மாவட்ட நீதிபதி,
கரூர்.